**<u>அசல் வழக்கு எண்: 351/2022</u>**

The Witness sweared under Oaths Act 1969 on this the day of 7th day of November 2025
பி.வா.சா.2. சதீஷ், த/பெ. கணேசன்.

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

வரதராஜீ நாயுடு என்பவர் எனது அம்மாவுடைய தந்தை என்றும் எனது தாய் வழி பாட்டனார் என்றால் சரிதான். கோவிந்தம்மாள் வரதராஜீ நாயுடு மனைவி என்றும் எனது தாய் வழி பாட்டி என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி எனது தாயார் என்றால் சரிதான். வாதிகள் எனது அம்மாவின் மூத்த சகோதரிகள் என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் அனைத்தும் போளூர் தாலுக்கா நாராயணமங்கலம் கிராமத்தை சேர்ந்தது என்றால் சரிதான். தாவா சொத்து கிராமம் எனது தந்தை கணேசனுக்கு பூர்விகமானது என்றால் சரியல்ல. உண்மையில் தாவா சொத்து தான் எனது தந்தையுடைய பூர்விகம் என்றால் சரியல்ல. எனது தாய்க்கு பூர்விக ஊராகும். 1ம் வாதி அவரது திருமணத்திற்கு பின்னர் தனது கணவருடன் சென்னையில் வசித்து வருகிறார் என்றால் சரிதான். 2ம் வாதி அம்புஜம் திருமணத்திற்கு பின்னர் காட்பாடியில் வசித்து வருகிறார் என்றால் சரிதான். எங்களுக்குள் பிரச்சனை ஏற்படுவதற்கு முன்னர் வாதிகள் எங்கள் வீட்டிற்கு வந்து செல்வார்கள் என்றால் சரிதான். எனது தாத்தா வரதராஜீ நாயுடு இறப்பதற்கு முன்னரே எனது பாட்டி கோவிந்தம்மாள் இறந்துவிட்டார் என்றால் சரிதான். எனது தாத்தா இறந்த தேதி, மாதம் தெரியவில்லை. 2015 அல்லது 2016 வருடம் இறந்தார். அவர் இறக்கும் போது எனக்கு சுமார் 20 வயது இருக்கும். இந்த வழக்கு சொத்து அனைத்தும் எனது தாத்தா வரதராஜீ நாயுடு பூர்வீக சொத்து என்றால் சரிதான். எனது தாத்தா உயிருடன் இருந்த போது அவரது வாரிசுகளான வாதிகள் மற்றும் 1ம் பிரதிவாதி மீது தனது சொத்தை பொருத்து 1995ம் வருடம் ஒரு பதிவு செய்யப்பட்ட உயில் எழுதி வைத்தார் என்றால் எனக்கு நேரடியாக தெரியாது, கேள்விபட்டுள்ளேன். அந்த உயில் படி தாவா சொத்துக்களில் வாதிகள் மற்றும் 1ம் பிரதிவாதிக்கு சரிசமமாக உரிமை உள்ளது என குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். எனது தாத்தா எனது பெயருக்கு எழுதி வைத்த வா.சா.ஆ.5 கிரைய பத்திரம் அசலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அதை வங்கியில் அடமானம் வைத்ததால் தாக்கல் செய்ய இயலவில்லை. உண்மையில் எனது தாத்தா வா.சா.ஆ.5 கிரைய பத்திரம் என் பெயரில் எழுதி வைக்கவில்லை என்றும் அதனால் இந்த ஆவணம் செல்லாது என்றால் சரியல்ல. அவ்வாறு எனது தாத்தா என் பெயருக்கு கிரையம் செய்து கொடுத்திருக்கும் பட்சத்தில்

அது குறித்து வாதிகளிடம் சொல்லியிருப்பார் என்றால் சொல்லியிருப்பார். வாதிகள் எனது தாத்தா இறந்த பின்னரும் என்னுடைய திருமண நிச்சயதார்த்தம் வரை எங்கள் வீட்டிற்கு வந்து போய் இருந்தார்கள் என்றால் சரிதான். சாட்சி பின்னர் நிச்சயத்திற்கு வரவில்லை என்றும் எனது தாத்தா இறந்த பிறகு கொஞ்ச நாள் வந்ததாக தெரிவிக்கிறார். நான் தற்போது மாற்றி சொல்கிறேன் என்றால் சரியல்ல. உண்மையில் எனது பெயரில் கிரைய பத்திரம் அவர் எழுதி கொடுத்திருந்தால் அது குறித்து வாதிகளிடம் அவரோ நாங்களோ தெரிவித்திருப்போம் என்றும் வா.சா.ஆ.5 அவரால் எழுதி கொடுக்கப்படவில்லை என்பதால் தான் அது குறித்து சொல்லவில்லை என்றால் சரியல்ல. வாதிகள் மற்றும் 1ம் பிரதிவாதி பெயரில் உள்ள பதிவு செய்யப்பட்ட உயிலை ரத்து செய்யாமல் எனது பெயரில் எனது தாத்தாவால் தாவா சொத்தை பொருத்து கிரையம் ஏற்படுத்த முடியாது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.5 கிரைய பத்திரம் பொய்யாக தயாரிக்கப்பட்டது என்றும் அது தாவா சொத்தில் வாதிகளுக்கு உள்ள உரிமையை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.5 கிரைய பத்திரல் உள்ள கையெழுத்து எனது தாத்தா வரதராஜீ நாயுடுவின் கையெழுத்து கிடையாது என்றால் சரியல்ல. வாதிகளின் சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் நான் வா.சா.ஆ.5 கிரைய பத்திரத்தை பொய்யாக தயாரித்துள்ளதால் அது சட்டப்படி வாதிகளை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. நான் தாவா சொத்தில் பி–அட்டவணை சொத்தை நான் வனசாட்சி என்பவரிடம் அடமானம் வைத்து அதை திருப்பி பின்னர் ஈக்குட்டாஸ் பேங்கில் அடமானம் வைத்தேன். மேற்கண்ட அடமான கடன் பத்திரங்கள் தாவா சொத்தில் வாதிகளுக்கு உரிய உரிமையை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.5 கிரைய பத்திரத்தில் வாதிகள் சாட்சி கையெழுத்து இடவில்லை என்றால் சரிதான். உண்மையில் எனது தாத்தா வா.சா.ஆ.5 கிரைய பத்திரத்தில் கையெழுத்து செய்திருந்தால் வாதிகளிடம் சாட்சி கையெழுத்து வாங்கியிருப்பார் என்றால் அவர் சொல்லியிருப்பார் அவர்கள் வராததால் வாங்கவில்லை. நான் அவர்கள் வரவில்லை என வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது தாத்தா உயிருடன் இருந்த போது அவருக்கான மருத்துவ செலவுகளை நான் தான் பார்த்தேன் என சொல்லும் நிலையில் அது சம்மந்தமான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வா.சா.ஆ.5 கிரைய பத்திரத்தில் அவரது வைத்திய செலவிற்காக தான் பணம் பெற்றதாக குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வாறு எதுவும்

வா.சா.ஆ.5 கிரைய ஆவணத்தில் குறிப்பிடப்படவில்லை என்றும் நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது தாத்தா உடல்நிலை சரியில்லாமல் இருந்த போது வாதிகளும் வந்து பார்த்து சென்றார்கள் என்றால் சரிதான். உண்மையில் எனது பெயரில் அவர் கிரையம் செய்து கொடுக்கவில்லை என்பதால் தான் அவ்வாறு வாதிகள் அவரை பார்க்க வந்து சென்ற போது எனது தாத்தா கிரையம் குறித்து அவர்களிடம் தெரிவிக்கவில்லை என்றால் சரியல்ல. தாவா பி–அட்டவணை சொத்து விஸ்தீரணம் 12 செண்ட் என்றால் சரிதான். அதில் 6 செண்டில் நான் வீடு கட்டியுள்ளேன் என்றால் சரிதான். உயில் படி எனது தாயாருக்கு 4 செண்ட் தான் தாவா பி–அட்டவணை சொத்து கிடைக்கும் என்றால் சரியல்ல. தாவா பி–அட்டவணை சொத்தில் வாதிகளுக்கும் தலா 4 செண்ட் உரிமை உள்ளது என்றால் சரியல்ல. 1ம் வாதியின் பேத்தியான சங்கீதாவை நான் திருமணம் செய்யாததால் தான் அவர்கள் எங்கள்மீது பொய்யான வழக்கு போட்டுள்ளதாக நான் எதிர்வழக்குரையில் தவறாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. எனது தாத்தா உயிருடன் இருந்த போது வாதிகளும் அவரது மருத்துவ செலவுகளை பார்த்து வந்தார்கள் என்றால் சரியல்ல. தாவா எ–அட்டவணை சொத்துக்களில் வாதிகளுக்கும் 1ம் பிரதிவாதிக்கும் சரிசம உரிமை உள்ளது என்றால் தாவா பி–அட்டவணை சொத்தை தவிர்த்து பிற சொத்துக்களில் சரிசம உரிமை உள்ளது. வாதிகளிடம் தாவா பி–அட்டவணை சொத்தில் 2 செண்டிற்கு பணம் கொடுப்பதாக நாங்கள் பஞ்சாயத்து பேசினோம் ஆனால் அதில் வாதிகள் ஒத்துவரவில்லை. எனக்கு தாவா பி–அட்டவணை சொத்தில் உரிமை இல்லை என்பதால் அப்படி பஞ்சாயத்து பேசினேன் என்றால் சரியல்ல. வழக்கு படி வாதிகளுக்கு தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

<u>**குறுக்கு விசாரணை முழுமையாக முடிக்கப்பட்டது. மறு விசாரணை இல்லை.**</u>

| | |
|---|---|
| சாட்சியின் கையொப்பம் | திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்<br><br>Sd/– S. Senthilbabu,<br>சார்பு நீதிபதி,<br>போளூர். |